26.02.2026

O.S.No.293/2022

PW1- ராஜா – த/பெ. பாஸ்கர்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 26.02.2026

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u> ( பிரதிவாதி தரப்பில்)

1. நான் 20 வருடமாக திராவிட முன்னேற்ற கழகத்தில் உறுப்பினராக உள்ளதால் கழகத்தின் By Law விவரங்கள் தெரியும் என்றால் சரிதான்.

2. என்னிடம் காண்பிக்கப்படுவது கழகத்தின் By Law என்றால் சரிதான்.திமுக கட்சியில் By Law பி.வா.சா.ஆ.1 ஆக வா.சா.1 குறுக்குவிசாரணையில் குறியீடு செய்யப்படுகிறது.

3. திராவிட முன்னேற்ற கழகம் இந்திய தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட கட்சி என்றால் சரிதான்.

4. கழகத்தின் உள்கட்சி தேர்தல் சம்மந்தமான அனைத்து அதிகாரமும் பொது செயலாளருக்கே உள்ளது என்றால் சரிதான்.

5. நான் தென்காசி மேற்கு ஒன்றிய செயலாளர் பதவிக்கு போட்டியிட்டேன் என்றால் சரிதான்.

6. எனக்கு நீதிமன்ற அதிகார வரம்பு செங்கோட்டை உரிமையியல் நீதிமன்றம் என்பதால் நான் இந்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய ஆள்வரை அதிகார வரம்பு இல்லாததால் என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

7. பொதுவாக ஒன்றிய செயலாளரை தேர்வு செய்வதற்கு ஊராட்சி ஒன்றிய வட்ட பிரதிநிதிகள், கிளை செயலாளர்கள் மற்றும் பேரூர் கழக வட்ட பிரதிநிதிகள் ஓட்டு போட்டு தேர்ந்தெடுப்பார்கள் என்றால் சரிதான்.

8. நான் போட்டியிடும் பதவிக்கு அடங்கும் ஊராட்சி மற்றும் பேரூர், வட்டம் அனைத்தும் செங்கோட்டை நீதிமன்ற எல்லைக்கு உட்பட்டது என்றால் சரிதான்.

9. ஒன்றிய செயலாளர் என்பவர் பொதுக்குழு உறுப்பினர் அந்தஸ்திற்கு தகுதியானவர் என்றால் சரிதான்.

10. மாவட்ட கழக செயற்குழு கூட்டம் மற்றும பொது குழு கூட்டத்திற்கும், கட்சி தலைமையால் கூட்டப்படும் பொது குழு கூட்டத்திற்கும் ஒன்றிய செயலாளர் கலந்து கொள்வார் என்றால் சரிதான்.

11. நாளது வரை தலைமைக் கழகத்தில் இருந்து ஒன்றிய செயலாளர் என பதவியிட்டு எந்த கடிதமும் வரவில்லை என்றால் சரிதான்.

12. 1ம் பிரதிவாதி பெயருக்கே ஒன்றிய செயலாளர் பதிவியிட்டு கடிதம் வருகிறது என்றால் சரிதான் பிரச்சனைக்கு பிறகே வருகிறது.

13. கழக விதிகளின் படி உள்கட்சி சம்மந்தமான பிரச்சனைகள் அனைத்திற்கும் கழக By Law படி பொது செயலாளருக்கு அதிகாரம் உள்ளது என்றால் சரிதான். எனவே நான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்வதற்கு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல.

14. 1ம் பிரதிவாதி பொது செயலாளரின் உத்தரவின் படி தான் ஒன்றிய செயலாளராக பதவி வகிக்கிறார் என்றால் சரிதான். என் வழக்கில் நான் கோரும் பரிகாரம் Infructous ஆகிவிட்டதாலும் சட்டப்படி நான் வழக்கு தாககல் செய்ய தடை செய்யப்பட்டதாலும் என்னுடைய வழக்கு தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u>

இல்லை.

ஒம்/—J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி